பதிவு எண்: M. 6311 ☆ தொலைபேசி: 51331 ☆ தோற்றம்: 1953 ☆ [illegible] ☆ [illegible] 10 காசு

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 20] சென்னை: ஐப்பசி 28 (13—11—72) திங்கள் வெளியூர்: ஐப்பசி 29 (14—11—72) செவ்வாய் [இதழ்: 124

சிரிப்புக்கு ஒரு செய்தி

அடுத்து ஆட்சிக்கு வரப்போவது நம்முடைய கட்சிதான் என்[illegible] இன்று நடந்த கட்சி [illegible] கள் கூட்டத்தி[illegible].ஜி.ஆ[illegible] தெரிவித்தார்.

—பத்திரிகைச் செய்[illegible]

ஹ......ஹா......ஹ
ஹி......ஹி......ஹி.

நிலைமைகள் தெளிவாகத் தெரிந்துவிட்டன

சட்டப்பேரவை ஒத்திவைப்புப் பற்றி முதலமைச்சர் கலைஞர் கருத்து

சென்னை, நவ. 13—

சட்டப் பேரவைக் கூட்டத்தை டிசம்பர் மாதம் 5-ஆம் நாள் காலை 10 மணி வரை தள்ளிவைப்பதாகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே.ஏ. மதியழகன் இன்று காலை சட்டப் பேரவை நடந்துகொண்டிருந்தபோது அறிவித்தார்.

எதிர்க் கட்சிக்காரர்கள் எழுப்பிய சில ஒழுங்குப் பிரச்சினைகளையடுத்து முதலமைச்சர் விளக்கம் அளித்தார்.

உடன் அவைத் தலைவர், தமது யோசனை என்ற பெயரால் சில கருத்துக்களை வெளியிட்டுவிட்டுத் தொடர்ந்து எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைகளுக்கிடையே திடீரெனப் பேரவையை மேற்கண்டவாறு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

சட்டப் பேரவை தள்ளிவைக்கப்பட்டவுடன் வெளியே வந்த முதலமைச்சரை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு, 'அடுத்த நடவடிக்கை என்ன' என்று வினவினர்.

முதலமைச்சர் கலைஞர் சிரித்துக்கொண்டே, 'நிலைமைகள் தெளிவாகத் தெரிந்துவிட்டன; அவ்வளவுதான் இப்போதைக்கு என் கருத்து' என்றார்.

வாதமடக்கி மரமல்ல தி.மு. கழகம்

எந்தப் புயலிலும் அசையாத ஆலமரம்

சென்னை, நவ. 13—

"புயலில் சாய்ந்துவிடும் வாதமடக்கி மரம் போன்றதல்ல தி. மு. கழகம்—அது ஆலமரம்போல் வேரூன்றி இருக்கிறது!

'கழக ஆட்சியைக் கவிழ்ப்போம்' என்று அர்த்தம் புரியாமல் பேசுகிறார்கள்; எந்த வகையிலும் இப்படிச் செய்துவிட முடியாது; அப்படியே சாய்ந்தாலும், அதைத் தாங்கி நிலை நிறுத்த முஸ்லிம் லீக் முன்னணியில் நிற்கும்!"

—முஸ்லிம் லீக் தலைவர்
அப்துல் வகாப்
(என்.வி.என். மணி விழாவில்)

வீர வரலாறு படைத்தவர்கள் நாங்கள்

எந்தவிதத் தியாகத்திற்கும் தயாராக இலட்சோப இலட்சம் மக்கள் இருக்கிறார்கள்

கவிழக்கூடிய நிலையில் கழகமோ நானோ இல்லை—கலைஞர் அறிவிப்பு

சென்னை, நவ. 13—

"கருணாநிதி ஆட்சி மூன்று நாளில் கவிழ்ந்துவிடும்—நாளைக்கே கவிழ்ந்துவிடும்—என்றெல்லாம் சொல்கிறார்கள்; யாராவது என் காலைத் தட்டி நான் விழுந்தால் தவிர கவிழப் போவதில்லை—கழக ஆட்சி கவிழப் போவதும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

நாங்கள் சாதாரணமாகப் பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள் அல்லர்; இன்னும் சொல்லப்போனால், பெரியார் அவர்களே—தங்களுடைய அடியைத் தாங்கித் தாங்கி—உரமேறி இருப்பதால், மற்றவர்கள் அடியைத் தாங்குகின்ற அளவுக்குத் திடகாத்திரம் பெற்றவர்களாக இருக்கிறோம்.

முப்பதாண்டுக் காலம்—நாற்பது ஆண்டு காலம் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் இங்கு இருக்கின்றோம்; பெரியார் அவர்களின் 'குடியரசு' அலுவலகத்தில் பணிபுரிந்தவர்—என்று ஒருவர் சொல்லலாம்; 'பெரியாரின் பையைத் தூக்கிக்கொண்டு போனவர்' என்று ஒருவர் சொல்லலாம்; 'பெரியார் இட்ட கட்டளையை சிரமேல்தாங்கி சிறைச்சாலைக்குச் சென்றவன்' என்றும் சொல்லிக் கொள்ளலாம்; இப்படி எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வரலாறு உண்டு.

வீர வரலாறுகளை—தியாக வரலாறுகளை—சரித்திரங்களைப் படைத்தவர்கள்தான் இன்றைக்கு இருக்கிறோம்; ஆகவே, பெரியார் அவர்களே—நான் உங்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன்—பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் நீங்கள் எங்களுக்குத் தைரியம் வழங்கினாலும், உங்கள் மனம் ஓரளவுக்கு உடைந்திருக்கும்; தயவுசெய்து நீங்கள் மனம் கலங்க வேண்டாம்; உங்களால் உருவாக்கப்பட்டவர்கள்தான் நாங்கள்; எங்களிடத்தில் எதையும் தாங்கக்கூடிய—இந்த இயக்கத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்யக்கூடிய இலட்சோபலட்சம் பேர் இருக்கின்றார்கள் என்ற உறுதியை மாத்திரம் உங்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன்."

—முதலமைச்சர் கலைஞர்
(என். வி. என். மணிவிழாவில்)

கே. ஏ. மதியழகன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

சட்டப் பேரவையில் முன்னறிவிப்பு

விவாதத்துக்கு வருவதற்குமுன் பேரவையை ஒத்திவைத்தார் அவைத் தலைவர் மதியழகன்

சென்னை, நவ. 13—

தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் மீது சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்களான பெரியகுளம் அன்புச்செழியனும், நிலக்கோட்டை முனியாண்டியும் இந்தத் தீர்மானத்துக்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்" என்ற தகவலை, பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று சட்டப் பேரவையில் வெளியிட்டார்.

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிக் கேள்விகள் கேட்டபோது இத்தகவலை திரு. மதியழகன் வெளியிட்டார்.

சட்டப் பேரவை விதிகளின்படி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கான முன்னறிவிப்புக் கொடுத்த தேதியையும்—விவாதத்துக்கு அதை எடுத்துக்கொள்ளும் தேதியையும் கழித்துப் பார்த்தால் இடையில் 14 நாட்கள் அவகாசம் இருக்க வேண்டும் என்றும், இந்த முன்னறிவிப்பு அக்டோபர் 30-ம் நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், எனவே, நாளைதான் இதனை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும் என்றும் அவர் விளக்கினார்.

தொடர்ந்து சில ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டு—அவற்றிற்குத் தீர்ப்பு வழங்குவதன் பேரால் திரு. மதியழகன் ஆளுங் கட்சிக்கு எதிரான முறையிலும்—புதிதாகத் தோன்றியுள்ள ஒரு கட்சிக்குச் சாதகமான முறையிலும் தம் சொந்தக் கருத்துக்களை மடமட வென்று வெளியிட்டார்.

இந்த நாட்டு மக்களின் ஆதரவை இந்த ஆட்சி இழந்துவிட்டது போலவும்—வெளியிலே எதட்ட நிலை உருவாகியிருப்பது போலவும்—எதிர்க்கட்சி வரிசையில் புதிதாகத் தோன்றியுள்ள கட்சியின் தலைவர் கூறியதையே எதிரொலிக்கும் வகையிலும் கருத்தறிவித்த அவைத் தலைவர் மதியழகன், 'இந்த அரசு உடனடியாக இராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் மக்களைச் சந்தித்து வாக்குப்பெற்று ஆட்சிக்கு வருவது நல்லது' என்று தெரிவித்தார்; 'இதனைத் தீர்ப்பாகக் கொள்ளாமல் எனது யோசனையாக முதல்வர் ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்றும், 'இதுதான் அவருக்கும்—அவர் சார்ந்துள்ள கட்சிக்கும் நல்லது' என்று 'அறிவுரை' வழங்க ஆரம்பித்துவிட்டார்.

பின்னர் திடீரென்று பேரவையை டிசம்பர் 5-ஆம் தேதிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்துவிட்டார்.

சலசலப்பால் தி.மு.கழகம் கலகலக்காது

சென்னை, நவ. 13—

"சலனமின்றி ஓடிக்கொண்டிருக்கும் நதியின்மேல் கற்களை வீசிச் சலனத்தை ஏற்படுத்திவிடலாம் என்று சிலர் முயற்சிக்கின்றனர்; அந்தக் கனவு ஒரு நாளும் பலிக்கப் போவதில்லை!"

—கி. வீரமணி
(என்.வி.என். மணி விழாவில்)

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கட்குப் பயண அலவன்சு

தமிழக அரசு உத்தரவு

திருச்சி, நவ. 13—

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகக் குழு—பேரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் ஊராட்சி ஒன்றியக் கவுன்சில்களின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிலிருந்து பயண அலவன்சையும்—தினசரி அலவன்சையும் எடுத்துக்கொள்ள அனுமதித்து அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியத் தலைவரிடமிருந்து வந்த வேண்டுகோளையொட்டி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற தி. மு. க. கூட்டம்

சென்னை, நவ. 13—

சட்டமன்ற தி. மு. க. கட்சிக் கூட்டம் இன்று இரவு 8-மணிக்கு அரசினர் தோட்டத்தில் உள்ள சட்டமன்றத் தி. மு. க. கட்சி அலுவலகத்தில் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபிலிருந்து சோளம் அனுப்பத் தடை

சண்டிகர், நவ. 13—

பஞ்சாபிலிருந்து சோளத்தை வெளியே அனுப்ப மாநில அரசு தடை விதித்திருக்கிறது; இந்தத் தடையுத்தரவு உடனடியாகச் செயலுக்கு வருகிறது.

ஆனால், [illegible] ஒருவர் தம்முடன் ஒரு கிலோ [illegible]ம் சோளம் எடுத்துச் செல்வதற்கும், அரசை கணக்கில் அல்லது உணவுக் கார்ப்பரேஷன் அனுமதிமீது அல்லது பெர்மிட் பேரில் சோளம் எடுத்துச் செல்லவும் தடை எதுவும் இராது.

வங்காள தேசத்தில் பொதுத் தேர்தல்

டாக்கா, நவ. 13—

1973 மார்ச்சில் வங்காள தேசத்தின் முதல் பொதுத் தேர்தலை நடத்த அரசு மும்முரமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறு அரசுத் துறைகளுக்குத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமான் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்திரா காங்கிரசின் முடிவுக்கு எதிர்ப்பு

உணவுத் தானியங்களின் மொத்த வியாபாரத்தை அரசு மேற்கொள்ளவேண்டும் என்ற புது காங்கிரசின் முடிவுக்கெதிராக உத்தரப் பிரதேச மாநிலத்தில் உணவுத் தானிய மொத்த வியாபாரிகளும்—சில்லறை வியாபாரிகளும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

வாரணாசி, மொரதாபாத், சுல்தான்பூர், பண்டா, அலகாபாத், மீரத் ஆகிய ஊர்களில் வேலைநிறுத்தம் முழு அளவில் நடந்தது.

போகப்போகத் தெரியும்—புரட்டு நடிகர் குடிபோகுமிடம்

துருப்பிடித்த ஆயுதத்தைக் கையிலேந்தி விளையாடுகிறார்

சென்னை, நவ. 10—

"மழைக் காலத்தில் காளான் முளைக்கும் – இப்போது ஒரு புதிய கட்சி முளைத்திருக்கிறது!

கழகத்தைவிட்டு வெளியேறியவர்கள் தனிக் கட்சி தொடங்குவதும் – பிறகு அதைக் கலைத்துவிட்டு வேறொரு பழைய கட்சியில் சேர்ந்து அதையும் குட்டிச்சுவராக்குவதும் புதிய ஒன்றல்ல!

கழகத்திலிருந்து சம்பத் வெளியேறினார் – புதுக் கட்சி தொடங்கினார்; பிறகு அதைக் கலைத்துவிட்டுக் காமராசரோடு சேர்ந்தார்; கோட்டையிலிருந்த அவரை சாலைக்கு இழுத்து வந்து நிறுத்திவிட்டு–இந்திரா காங்கிரசுக்கும் போய்விட்டார்! அதை என்ன கதியாக்கப் போகிறாரோ – போகப் போகத்தான் தெரியும்!

அதேபோல்தான், எம். ஜி. ஆரின் எதிர்காலமும் இருக்கும்! இப்போது புதுக் கட்சி தொடங்கியிருக்கும் அவர், விரைவில் வேறொரு பழைய கட்சியோடு ஐக்கியமாகத்தான் போகிறார்! அவரோடு போகிறவர்களுக்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

எம். ஜி. ஆரை அண்ணா அவர்கள், 'காட்சிப் பொருளாக'த்தான் வைத்திருந்தாரே தவிர, கட்சிக்காரராக வைத்திருக்கவில்லை!

எதை எந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அதை அந்த இடத்தில் வைக்கவேண்டும்!

காங்கிரசாகட்டும் – கம்யூனிஸ்டுகளாகட்டும்–நம்மோடு போராட முடியாமல்–நேருக்குநேர் நின்று வாதாட இயலாமல் நம்மை மறைமுகமாக எதிர்க்கக் கையிலே எடுத்த ஆயுதம்தான் 'இலஞ்ச ஊழல்' என்பது! காமராசர்கூட எடுத்துப் பார்த்து விட்டுத் தூக்கி எறிந்துவிட்டுப் போன ஆயுதம் அது! அந்தத் துருப்பிடித்த ஆயுதத்தை எடுத்துவைத்துக் கொண்டுதான் இப்போது எம்.ஜி.ஆர். ஆடுகிறார்!

கழகத்திற்காக நிறையப் பணம் கொடுத்திருக்கிறேன்' என்கிறார்; கணக்குத் தரட்டுமே–திருப்பித் தந்துவிடுவோம்! பாவம் -- வரி பாக்கியைக் கட்டுவதற்காவது அந்தப் பணம் பயன்படட்டும்!

"செயற்குழுவிலும் -- பொதுக்குழுவிலும் கேள்வி கேட்பேன்; பதில் சொல்லாவிட்டால் மக்கள்மன்றத்தில் வைப்பேன்" என்றார் எம்.ஜி.ஆர்.; இப்போது ஏன் கவர்னரிடமும் – குடியரசுத் தலைவரிடமும் ஓடுகிறார்? அதுதானா மக்கள் மன்றம்?

"எம். ஜி. ஆர்.மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று 26 செயற்குழு உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டுத் தந்தபோது, 'அந்த 26 பேர்கள்தானா தி.மு. கழகம்' என்றார் அவர்!

பாகிஸ்தானும் – சீனாவும் இந்தியாமீது படையெடுக்கிறது என்றால், நாடாளுமன்றத்திலுள்ள முக்கியமானவர்களில் சிலருடன் கலந்து பேசித்தான் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமே தவிர, இந்தியாவிலுள்ள அத்தனை கோடி மக்களையும் தனித்தனியே கலந்துபேசி அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பதில்லை!

எம். ஜி. ஆரும் – கல்யாணசுந்தரமும் சேர்ந்து தி. மு. கழக அரசைக் கவிழ்த்துவிட முடியுமென்றால், நாங்கள் அத்தனைபேரும் சேர்ந்தால் எங்களால் எவ்வளவு செய்ய முடியும்; 'பாவம் – பிழைத்துப் போகட்டும்' என்றிருக்கிறோம்!"

—ஏ. வி. பி. ஆசைத்தம்பி

(சென்னை--சேத்துப்பட்டு கூட்டத்தில்)

வங்கதேசத்தை அங்கீகரிக்க சீனா நிபந்தனை

புதுடில்லி, நவ. 13—

"டாக்கா நிர்வாகம் (வங்காள தேசம்) ஐ. நா. தீர்மானங்களைக் கௌரவித்து -- பாகிஸ்தான் போர்க் கைதிகளையும் திருப்பி அனுப்பி -- உண்மையான சுதந்திரத்தை உருவாக்கினால், வங்காள தேசத்தை அங்கீகரிக்க சீனா தயாராக இருக்கிறது"

என்று சீனத் தலைமையமைச்சர் சூ யென் லாய், பீகிங்கில் அந்நியப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

சீனாவின் போக்கு

வங்காள தேச அமைச்சர் கடும் கண்டனம்

புடாபெஸ்ட், நவ. 13—

"சோஷலிஸ்டு நாடு என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் சீனா, விடுதலைப் போராட்டம் நடத்தும் மக்களின் எதிரிகளை எப்படி ஆதரிக்க முடியும் என்பதை எங்களுடைய நாட்டு மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை"

என்று, வங்காள தேச வெளியுறவு அமைச்சர் அப்துஸ் சமத் கூறியிருக்கிறார்; அவர் மேலும் ... பிட்டிருப்பதாவது:

"வங்காள தேச விடுதலைப் போராட்டத்தின்போது ஆக்கிரமிப்பாளரைச் சீனா ஆதரித்ததும் -- ஐ.நா.-வில் நாங்கள் சேர விடாமல் சீனா தடுத்ததும், சீனத் தலைமையினரின் கொள்கையில் எங்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது."

அந்த 'மக்கள்' யார்?

அப்பாவி:—"'மக்கள் -- மக்கள்' என்று சில தலைவர்கள் பேசுகிறார்களே -- அந்த 'மக்கள்' யார்?"

அரசியல்வாதி:—"அந்தத் தலைவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு 'பொறுமை'யாக இருப்பவர்கள்!"

அரசுப் பணிகளில் சேரும் வயது வரம்பு

25-லிருந்து 26ஆக உயர்வு

தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ. 13—

அரசாங்கப் பணிகளுக்கு ஊழியர்களை நியமிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பை 25-லிருந்து 26 வயதாக உயர்த்தித் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசாங்கப் பணிகளுக்கு ஊழியர்களை நியமிக்க இப்போது வயது வரம்பு 18 லிருந்து 25-வரை என்று இருக்கிறது; இதை 26 ஆக உயர்த்தி அரசு இப்போது உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

மத்திய அரசு வேலைகளுக்கான உச்சவரம்பு வயதை 24-லிருந்து 26ஆக உயர்த்தி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது; தேர்வுப் பணிக் குழுவினருடன் கலந்தாலோசித்தபோது அவர்களும், 'அரசுப் பணிகளுக்கான உச்சவரம்பு வயதை 26 ஆக உயர்த்தலாம்' என்று சிபாரிசு செய்தனர்; பரிசிலனைக்குப் பிறகு, குழுவினரின் சிபாரிசை ஏற்றுக் கொள்வது என்று அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்ட சில பதவிகளுக்கு (நிபுணத்துவம் வாய்ந்தவை) உள்ள உச்சவரம்பு வயது 28 ஆகக் குறைக்கப்படமாட்டாது.

பிற்பட்ட சமூகத்தினர் -- மலைசாதியினர் -- அரிசனங்கள் ஆகியோர் இப்போது அனுபவித்து வரும் வயது வரம்புச் சலுகைகள் இந்த உத்தரவு காரணமாக எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள்.

'பரிபாஷை' அது!

அப்பாவி:—"'தார்மீக ஆதரவு -- தார்மீக ஆதரவு' என்கிறார்களே — அப்படி என்றால் என்ன?"

அரசியல்வாதி:—"தொண்டர்களே இல்லாத கட்சித் தலைவர்களின் 'பரிபாஷை' அது!"

செய்தி விளக்கம்

யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க!

"!! யாரை நம்பியும்--எந்த அரசியல் கட்சித் தலைவர் வருவார் என்று நம்பியும் நான் போராட்டம் நடத்தவில்லை; ஆதரவு தெரிவித்த நண்பர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்."

—ஊழியர் கூட்டத்தில் புரட்சியார் ('நவமணி' செய்தி)

ஆமாம் -- ஆமாம் -- நூற்றுக்கு நூறும் உண்மை!

கல்யாணசுந்தரத்தையும் -- பாலதண்டாயுதத்தையும் நம்பியா புரட்சியார் ஊர்வலம் நடத்தினார்? கல்யாணசுந்தரம்தானே இரஷ்யாவிலிருந்து ஓடோடி வந்தார்--ஒட்டிக்கொள்ள!

"இதுவரை கிடைக்காத 'சான்ஸ்' இப்போது கிடைத்திருக்கிறது- இதை நழுவவிடக்கூடாது" என்றுதானே காம்ரேடுகள், இரஷ்யா போயிருந்த கல்யாணசுந்தரத்துக்கு அவசர அழைப்பு விடுத்து வரவழைத்தார்கள்?

'நல்ல ஸ்டார் வால்யூ' தலைவரும் --அவருடைய ரசிகர்களும் கிடைத்திருக்கும்போது அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறலாமா?

ஆச்சாரியார் கட்சியைச் சேர்ந்த எச்.வி. ஹண்டேதான் ஏமாந்து விட்டார் -- பாவம்! 'என்னை வந்து யாரும் பார்க்கவில்லை' என்று கூறி, 'ஊர்வலத்துக்கு ஆதரவு இல்லை' என அறிவித்துவிட்டார்--இப்போது யாருக்கு நட்டம்?

'இவர் இல்லையென்றால் இவருடைய தலைவர் இருக்கிறார்' என்று எண்ணி, ஆச்சாரியாரையே நேரில் பார்த்து தார்மீக ஆதரவும் -- அத்துடன் 'ஆசீர்வாதமும்' பெற்று வந்துவிட்டார் புரட்சியார்!

'வீடு பற்றி எரியும்போது அழைப்பா அனுப்ப முடியும்? அக்கறையுள்ளவர்கள் தாங்களே வந்து ஊர்வலத்திற்கு ஆதரவுதர வேண்டும்' என்றுதான் புரட்சியார் கூறினாரே தவிர, யாரையும் நம்பி அவர் ஊர்வலம் நடத்தவில்லை தான்!

'வீடு பற்றி எரியும்போது பிடுங்கியவரை இலாபம்' என்று-- ஓடோடி வந்து சேர்ந்தார் கல்யாணசுந்தரம்! ஹண்டேக்கு இந்த யோசனை இல்லாமல் போய்விட்டது!

ஹண்டேயை இடித்துரைக்கத்தான், 'நான் யாரை நம்பியும் போராட்டம் நடத்தவில்லை' என்கிறார் புதுக் கட்சித் தலைவர்! அதுவும், ஆச்சாரியாரின் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு திரும்பிய சூட்டோடு!

'ஹண்டேக்குச் சரியான சூடு கொடுத்திருக்கிறார் வாத்தியார்' என்று சீட்டாடிகள் திருப்தியடையலாம்!

அதே நேரத்தில், அண்டர் கிரவுண்டு கட்சியின் கௌரவம் என்ன ஆவது? கல்யாணசுந்தரத்தையும்தானே பாதிக்கும் புரட்சியாரின் கூற்று?

'நான் யாரை நம்பியும் போராட்டம் நடத்தவில்லை -- ஆதரவு தெரிவித்து வந்தவர்களுக்கு நன்றி' என்றால் என்ன அர்த்தம்?-- 'ஏதோ, தானே வந்து ஆதரித்த கல்யாணசுந்தரத்துக்கும் -- அவர் கட்சிக்கும் நன்றி; இதோடு அவர் திருப்தியடைந்துவிட வேண்டும்; இதற்கு மேல்வேறு ஒன்றும் எதிர்பார்க்க வேண்டாம்' என்பதுதானே!

இந்தியா-சுவீடன் ஒத்துழைப்பு

இந்தியா—சுவீடன் இடையே நிலவும் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்காக ஒரு கூட்டுக் குழு அமைக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

வளர்ச்சி கண்டுள்ள ஒரு மேலை நாட்டுடன் முதல் தடவையாக இந்தியா அத்தகைய குழுவை அமைக்கிறது.

அதே நேரத்தில் இரு ஒப்பந்தங்களிலும் கையெழுத்திடப்பட்டிருக்கிறது; அவற்றின்படி, அடுத்த மூன்றாண்டுக் காலத்தில் பயன்படுத்த ரூ. 38.50 கோடிக்கும் பொருளாதார -- தொழில் நுட்ப உதவியை சுவீடன் அளிக்கும்.

சுவீடன் அளிக்கும் கடனுக்கு வட்டி இல்லை; முக்கால் சத விகித சேவைக் கட்டணம் மட்டுமே உண்டு.

இயந்திரங்கள் -- துணைச் சாதனங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்ய அக் கடனில் ரூ. 6 கோடி நடப்பு ஆண்டில் பயன்படுத்தப்படும்.

அடுத்து வரவிருக்கும் 'புரட்சி மந்திரி சபை'

"அடுத்து ஆட்சிக்கு வரப்போவது நம்முடைய கட்சிதான்" என்று தமது கட்சி ஊழியர்களிடையே அறிவித்துவிட்டார் 'புரட்சித் தலைவர்'!

அ...ப்...பா...டா! ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்தது! 'அடுத்துத் தமிழ்நாட்டில் யார் ஆட்சிக்கு வருவார்களோ' என்று மக்கள் இராப்பகலாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்! அடியேனுக்கும் ஒரு பெரிய சந்தேகம் தீர்ந்தது!

கொஞ்சநாளாகத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளைப் பார்த்தால் ஒரே குழப்பம்! எங்கே புரட்சித் தலைவரை விட்டுவிட்டு, அண்டர் கிரவுண்டு கல்யாணசுந்தரமோ --மாஜி ஆயுள் கைதி பாலதண்டாயுதமோ முதலமைச்சராக வந்துவிடுவார்களோ என்பது தான் என்னுடைய பயம்! நல்லவேளையாக, 'என்னுடைய கட்சிதான் ஆட்சிக்கு வரப்போகிறது' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் புரட்சித் தலைவர்!

ஆமாம் -- இதை இப்போதே சொல்லிவிட்டதுதான் நல்லது! இன்னும் கொஞ்சநாள் சும்மாயிருந்துவிட்டால், பிறகு 'அண்டர் கிரவுண்டு' கட்சியும் மந்திரி சபையில் பங்குபோட்டுக் கொள்ள வந்துவிடும்!

இப்போதே, புரட்சித் தலைவருக்குக் கிடைத்துவந்த விளம்பரத்தில் பாதியைப் பங்குபோட்டுக் கொண்டுவிட்டார்கள்—கல்யாணசுந்தரனும், பாலதண்டாயுதமும்!

பத்திரிகையைப் புரட்டினால், நாலு பக்கமும் புரட்சித் தலைவரின் படங்களும் -- சிறப்புப் பேட்டிச் செய்திகளும் -- 'பெட்டிச் செய்தி'களும் இருந்த நிலைமை போய், இப்போது சரிபாதி இடத்தைக் கல்யாணசுந்தரம் ஆக்கிரமித்துவிட்டார்!

குடியரசுத் தலைவரிடம் மனுக் கொடுத்ததிலிருந்து கவர்னரிடம் 'மகஜர்' கொடுத்தது வரையிலும் புரட்சித் தலைவருக்குக் கிடைக்க வேண்டிய முழுப்பெருமையிலும் சரிபாதியைக் கல்யாணசுந்தரம் கட்சி 'அபகரித்து' விட்டது!

ஊர்வலப் படத்திலும் புரட்சித் தலைவருக்குச் சரிக்குச் சமமாக அல்லவா கல்யாணசுந்தரமும்-- பாலதண்டாயுதமும் இடம் பெற்றிருக்கிறார்கள்? ஊர்வலத்தில் வந்த கூட்டம் அவ்வளவும் அவர்களுக்காகவா வந்தது? 'மெயில்' ஏடு குறிப்பிட்டுள்ளதைப்போல், தங்கள் அபிமான சினிமா நட்சத்திரத்தைப் பார்க்க வந்த கூட்டம்தானே?

நட்சத்திர நடிகரின் 'கவர்ச்சி'யைப் பயன்படுத்திக் கொள்ளத்தானே கல்யாணசுந்தரம் தமது இரஷ்யச் சுற்றுப்பயணத்தை அரைகுறையாக முடித்துக் கொண்டு ஓடோடி வந்தார்?

அடுத்து எந்தக் கட்சி ஆட்சிக்கு வருவது என்பதை இப்போதாவது திட்டவட்டமாக அறிவித்தாரே! இன்னும் சிறிதுகாலம் கடத்தியிருந்தால் மேலும் பல சங்கடங்கள் ஏற்படக்கூடும்!

புதுக் கட்சிப் போராட்டத்துக்குத் தார்மீக ஆதரவு தர முன்வந்த இராசகோபாலாச்சாரியாரின் கட்சி ஒன்று இருக்கிறது! டாக்டர் ஹண்டேதான் காலை வாரிவிட்டார் என்றாலும், அந்தக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரான ஆச்சாரியாரின் 'ஆசி' கிடைத்துவிட்ட பிறகு, அந்தக் கட்சிக்கும் 'பங்கு' கொடுத்துத்தானே தீரவேண்டும்?

இன்னும் சில கட்சிகளும் இருக்கின்றன; மூஸ்லிம்கள் பெயரால் ஒரு கட்சியின் கொடியும் ஊர்வலத்தில் வந்ததாம்; ஆரியசங்காரன் என்ற நபருக்கு ஒரு கட்சி இருப்பதாகவும் -- அவரும் ஊர்வலத்தில் வந்ததாகவும் புரட்சித் தலைவர் கூறியிருக்கிறார்! தார்மீக ஆதரவு தருவதாகக் கூறிய தமிழ்நாடு இந்திரா கட்சித் தலைவர் வீரபாகு வேறு இருக்கிறார்! அவர்களெல்லாம் ஆட்சியில் பங்கு கேட்டாலும் கேட்கக் கூடும்!

"அதெல்லாம் முடியாது; என்னுடைய கட்சிதான் அடுத்த ஆளுங்கட்சி" என்று உறுதியாக அறுதியிட்டுக் கூறிவிட்டதால், அடுத்த முதலமைச்சரும் சாட்சாத் புரட்சித் தலைவர்தான் என்பது சந்தேகமில்லாமல் தெரிந்துவிட்டது!

சபாஷ் தலைவரே -- நீர் உண்மையிலேயே பெரிய இராசதந்திரிதான்! புரட்சித் தலைவர்தான்! இதில் எள்ளளவும் எனக்குச் சந்தேகமில்லை!

ஆனால் எனக்கு ஒரு சந்தேகம்; எப்போது – எப்படி – இந்த ஆட்சி மாறப்போகிறது என்பதுதான்!

பேரறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட கழக ஆட்சி கவிழ்க்கப்பட்டு மறுதேர்தல் நடக்கப் போகிறதா? அல்லது, தேர்தல் நடத்தாமலே உங்கள் கட்சியை அழைத்து மந்திரி சபை அமைக்கும்படி கவர்னர் கேட்டுக்கொள்ளப் போகிறாரா?

இப்போதுள்ள கழக ஆட்சியைக் கவிழ்ப்பது என்பதோ -- கலைப்பது என்பதோ -- இயலாது என்பதை மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலமே கூறிவிட்டார்! இந்த ஆட்சியை அகற்றக் கூடிய அளவுக்கு எந்தவிதக் காரணத்தையும் அவர்களால் கண்டுபிடிக்கமுடியவில்லை -- கண்டு பிடிக்கவும் முடியாது!

அப்படியே ஆட்சியைக் கவிழ்த்துவிட்டாலும், அடுத்து ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தியே தீரவேண்டும்; இந்திரா அம்மையாரின் கட்சியும் தேர்தலைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்!

தேர்தல் என்று வந்தால், தமிழ்நாட்டில் காமராசரின் சிண்டிகேட் கட்சி வேறு இருக்கிறது; அதையும் மீறியல்லவா இந்திரா கட்சி தலைதூக்க வேண்டும்; இந்த நிலையில், தேர்தல் வைக்க இந்திரா அம்மையார் துணிவாரா?

சிண்டிகேட்டையும் --- இண்டிகேட்டையும் தாண்டி உங்கள் கட்சி ஆட்சிக்கு வந்துவிடும் என்று வாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலேயே நிற்காது என்றா நினைப்பா உமக்கு?

இப்போது தார்மீக ஆதரவு தர முன்வந்துள்ள இந்திரா கட்சி வேறு -- உங்கள் கட்சி வேறு என்று நான் வேறுபடுத்திக் கூறியதற்காக மன்னிக்கவேண்டும் -- இப்போது அப்படித் தானே! தேர்தல் நெருக்கத்தில் வேண்டுமானால், நீங்கள் இருவரும் ஒன்றாக ஆகிவிடக் கூடும்! இன்றுள்ள நிலையை வைத்துத்தானே கணக்குப் போட முடியும்!

நீங்களும் -- இந்திரா கட்சியும் இணைந்தால், காமராசர் கட்சியும் -- ஆச்சாரியார் கட்சியும் 'மகா கூட்டணி' அமைத்து உங்களை எதிர்க்காதா? ஆச்சாரியார் கட்சியும் -- காமராசர் கட்சியும் உங்களை ஆதரித்தால் அதற்கு இந்திரா அம்மையார் சம்மதிப்பார்களா?

இப்படியெல்லாம் சந்தேகங்கள் எழுந்து என் மூளையைக் குழப்புகின்றன! எந்தத் தைரியத்தில் உங்கள் கட்சி அடுத்து ஆட்சிக்கு வரப்போவதாகச் சொன்னீர்கள் என்பதைத் தயவுசெய்து இப்போதே வெளிப்படுத்தினால் நல்லது.

சட்டமன்றத்தையும் கலைக்காமல் -- மறுதேர்தலும் நடத்தாமல்-- கவர்னர் உங்களை அழைத்து, 'மந்திரி சபை' அமைக்கும்படிக் கேட்கப்போகிறார் என்றுதான் உங்கள் அறிவிப்பிலிருந்து புலனாகிறது; ஆனால், அதில் அடங்கியுள்ள 'மர்மம்'தான் புரியவில்லை!

பத்தாந் தேதி கவர்னரைச் சந்தித்தபோது, உங்களை மட்டும் கவர்னர் தனியாக அழைத்து காதில் ஏதேனும் இரசியமாகக் கூறியிருப்பார் என்று இந்தச் சந்தேகப் பிராணியின் பேதை நெஞ்சம் நம்புகிறது; அதை வைத்துத்தான் 'அடுத்த ஆட்சி எங்கள் கட்சியின் ஆட்சி' என்று அடித்துச் சொல்லியிருக்கிறீர்; எப்படி எனது யூகம் -- என்றாலும் ஒரு சந்தேகம்!

நூற்றெழுபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியிலிருந்துஅகற்றிவிட்டு, ஏழெட்டு உறுப்பினர்களை மட்டும் கொண்ட உங்கள் கட்சியை எப்படி ஆட்சியில் அமர்த்தப்போகிறார்கள் என்பது தான் புரியவில்லை; ஒருவேளை, அதற்கும் உங்கள் 'மக்களாட்சித் தத்துவ'த்தில் இடமிருக்குமோ என்னமோ -- நான் எப்படி அறிவேன்? புரட்சித் தலைவர் ஆயிற்றே நீர் -- இதிலும் ஏதேனும் புரட்சி செய்திடக் கூடும்!

எப்படியோ -- உங்கள் கட்சி ஆட்சிக்கு வந்து -- நீங்கள் முதலமைச்சராக வரப்போவது உறுதி என்று சொல்லிவிட்டீர்!

உங்கள் மந்திரிசபை எப்படி அமையப்போகிறது என்பதை நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், எளியேனுடைய எனது யோசனையையும் கொஞ்சம்கேட்டால் நல்லது!

தங்களை முதலமைச்சராகக் கொண்ட மந்திரி சபையில் யார் யாரைச் சேர்த்துக்கொள்ளலாம் -- எந்தெந்த இலாகாவை யார் யாருக்குக் கொடுக்கலாம்-- மந்திரி சபை பதவியேற்றதும் என்னென்ன கொள்கைத் திட்டங்களை அறிவிக்கலாம் என்பதைப் பற்றியெல்லாம் தாங்கள் இப்போதே மூளையைப் போட்டுக் குழம்பிக்கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்; தயவு செய்து அந்தக் கவலையை விட்டுவிங்கள்; அடுத்த கட்டுரையில் தங்களுக்கு அடியேனின் யோசனைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

மா. சே.

'தி. மு. கழக அரசுக்குத் துணை நிற்போம்'

தமிழ்நாடு முஸ்லிம் லீக் உறுதி

செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

திருச்சி, நவ. 13—

'தி. மு. கழகத்துடன் முஸ்லிம் லீக் உறவு நீடிக்கிறது என்பதை விளக்கித் தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் வெளியிட்ட அறிக்கையை இந்தச் செயற்குழுக் கூட்டம் முழுவதுமாக ஆதரிக்கிறது.

"இன்றுள்ள தோழமை அரசு, அரசியல் சட்டப்படி தன் முழுக் காலத்திலும் செயல்பட முஸ்லிம் லீக் துணை நிற்கும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறது"

என்று, திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு முஸ்லிம் லீக் செயற்குழுக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

கூட்டத்திற்கு தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அப்துல் வகாப் எம்.எல்.சி. தலைமை தாங்கினார்.

மாவட்ட முஸ்லிம் லீக் செயலாளர் நகருத்தீன் அனைவரையும் வரவேற்றார்.

சட்டமன்ற முஸ்லிம் லீக் உறுப்பினர்களும்--மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர்களும் பேசினர்.

"தமிழ்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் அனைவரையும் எந்தவிதமான பாகுபாடுமில்லாமல் பிற்பட்ட சமூகத்தினராக அறிவிக்க வேண்டும்"

என்று கேட்டுக்கொண்டு மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சாலைகள் -- அன்றும் இன்றும்

நமது நாட்டில் 1947-ம் ஆண்டில் இருந்த சாலைகளின் மொத்த நீளம் 3,88,226 கிலோ மீட்டராகும்; இப்போது அது 12,50,000 கிலோ மீட்டராக அதிகரித்திருக்கிறது.

இதே காலத்தில் மேல்மட்டச் சாலைகளின் நீளம் 1,45,855 கிலோ மீட்டரிலிருந்து 4,30,000 கிலோ மீட்டராக அதிகரித்திருக்கிறது.

தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 21,440 கிலோ மீட்டரிலிருந்து 28,819 கிலோ மீட்டராக அதிகரித்திருக்கிறது.

சுமார் 5 இலட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை சமுதாய வளர்ச்சி வட்டங்கள் -- வனத் துறைகள் -- எல்லை சாலை நிறுவனங்கள்போன்றவைகளே அமைத்திருக்கின்றன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு முற்பட்ட காலத்தில் சுமார் ரூ. 40 கோடி சாலைகளின் வளர்ச்சிக்கென முதலீடு செய்யப்பட்டிருந்தது; நான்காவது திட்ட காலத்தில் இந்த முதலீடு ரூ 871 கோடியாக அதிகரித்திருக்கிறது.

நான்காவது திட்ட காலத்தில் சாலைகள் முன்னேற்றத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் மொத்த தொகையில் சுமார் 250 கோடி கிராமப் பகுதிகளில் சாலைகளை அமைப்பதற்கென்று செலவு செய்யப்படும்.

ஆசிரியருக்கு மடல்

புலியைப் பார்த்துச் சூடு போட்டுக்கொண்ட பூனை

ஐயா,

'புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டது' என்பார்கள்! தற்போது தமிழ்நாட்டு அரசியலில் அதுதான் நடக்கிறது!

தி. மு. கழகம் ஆளுங்கட்சியாக மாறி -- ஆண்ட காங்கிரசு எதிர்கட்சியாக மாறியபின் தி. மு. கழகத்துக்கு எப்படி இவ்வளவு செல்வாக்கு வந்தது -- எப்படி அது வளர்ந்தது -- என்றெல்லாம் மற்றக் கட்சியினர் ஆராய்ந்தனர்.

கழக வளர்ச்சிக்கு என்னென்னவை காரணங்களாக இருந்தனவோ அவற்றையெல்லாம் சில கட்சிகள் செய்தும் பார்த்தன; குறிப்பாகக் காமராசர் கட்சி அதில் முன்னணியில் இருந்தது.

'சினிமாவால்தான் தி. மு. க. வளர்ந்தது' என்று நம்பி -- ஒரு சினிமா நடிகரைத் தூக்கிவைத்துக் கொண்டு ஆடினார்கள்! சிலர், சினிமாக் கதை -- வசனம் எழுதிப் பார்த்தார்கள்!

'அடுக்குச் சொல் அலங்காரப் பேச்சால்தான் கழகம் வளர்ந்தது' என்று கருதி சில மேடைப் பிரசங்கிகள், அடுக்குச்சொல் பேச ஆரம்பித்துத் தடுக்கி விழுந்தார்கள்!

'மாணவர்களைப் பிடித்தால் வளர்ந்துவிடலாம் -- என்று எண்ணி, கல்லூரி கல்லூரியாகப் படையெடுத்துப் பார்த்தார்கள்; இதனால் மாணவர்களின் படிப்புப் பாழானதுதான் மிச்சம்! தேய்ந்த கட்சி வளர்ந்தபாடில்லை!

'ஆசிரியர் அறப்போராட்டம்' என்றனர்; 'விவசாயிகள் கிளர்ச்சி' என்றனர்; 'விலைவாசிப் போராட்டம்' என்றனர் -- எதனாலும் கட்சி வளரவில்லை! அறுபத்தேழில் இருந்ததையும் எழுபத்தொன்றில் இழந்ததுதான் மிச்சம்!

காமராசரின் கட்சிக்கே இந்த நிலை என்றால், இப்போது முளைத்துள்ள புதுக் கட்சியும், 'தி. மு. கழகத்தைக் காப்பியடித்தே வளர்ந்துவிடலாம்' என்று கனவு காண்கிறது!

கட்சியின் பெயரிலிருந்து கொடி வரையில் எதையும் சுயமாக உருவாக்கும் திறனில்லை -- எல்லாம் இரவல்! டூப்ளிகேட்! அப்பட்டமான 'காப்பி'!

புதிய கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கும் 'பாரம்'கூடத் தி. மு. க. மாடல்தான் -- அதில் ஒன்றுகூட மாற்றமில்லை! அதே மாதிரியான காகிதம் -- அதேமாதிரி எழுத்துக்கள் -- அதே அகலம் -- அதே நீளம் -- அதில் உள்ளதைப் போன்றே வாசகங்கள் -- எல்லாம்!

'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று தலைப்பில் உள்ள வாசகத்துக்குமுன், 'அண்ணா' என்ற சொல்லை மட்டும் புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள் -- அவ்வளவுதான்!

போகட்டும்; நம்மைப் பார்த்துக் காப்பியடிப்பதால் நமக்கு ஒன்றும் நட்டமில்லை!

'காப்பியடிப்பதிலாவது கொஞ்சம் யோசனை வேண்டாமா? 'ஈயடிச்சான் காப்பியா அடிப்பது?

தி. மு. க. உறுப்பினர் சேர்க்கும் பாரத்தில் --

"இதில் கையொப்பமிட்டுள்ள நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோளையும் -- நோக்கங்களையும் -- திட்டங்களையும் ஒப்புக்கொண்டு மேற்படி கழகத்தில் உறுப்பினராகச் சேர விரும்பி இதன் மூலம் விண்ணப்பித்துக் கொள்கிறோம்; கழகத்தின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பதாக நாங்கள் உறுதி கூறுகிறோம்"

என்ற வாசகங்கள் உள்ளன; இதே வாசகங்கள், புதுக் கட்சி உறுப்பினர் சேர்க்கும் பாரத்திலும் உள்ளது! கட்சியின் பெயருக்கு முன்னால், 'அண்ணா' என்ற சொல்லைச் சேர்த்திருப்பது ஒன்றுதான் மாற்றம்!

இந்தப் பாரத்தில் கையெழுத்துப் போட்டு உறுப்பினராக இதுவரையில் இருபது இலட்சம் பேர் எப்படி உறுப்பினர்களாகச் சேர்ந்தார்களோ தெரியவில்லை!

அந்தக் கட்சியினர் குறிக்கோள் என்ன -- திட்டங்கள் என்ன? இதுவரை அறிவிக்கப்படவுமில்லை -- விளக்கப்படவுமில்லை!

இந்தக் கேள்வியைப் புதுடில்லியில் உள்ள பத்திரிகை நிருபர்களே கேட்டும்கூட, அந்தக் கட்சியின் தலைவரிடமிருந்து திட்டவட்டமான பதிலைப் பெற முடியவில்லை!

குறிக்கோள் -- நோக்கம் -- திட்டம் ஆகியவை என்னவென்றே தெரியாமல் எப்படிப் புதிய உறுப்பினர்கள் அக்கட்சியில் சேர ஒப்புக்கொண்டார்களோ -- புரட்சித் தலைவருக்குத்தான் வெளிச்சம்!

'மேலும், சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பதாகவும்' அந்தப் பாரத்தில் உறுதி கூறவேண்டியுள்ளது; புதிய கட்சியின் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுவிட்டனவா? உறுப்பினராகச் சேரும் ஒவ்வொருவரும் சட்ட திட்டப் புத்தகத்தைப் படித்துப் பார்த்துவிட்டுத்தான், அந்தப் பாரத்தில் கையெழுத்துப் போடுகின்றனரா?

திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான், உறுப்பினர்கள் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் -- புதிய கட்சியிலுமா அப்படி?

சட்ட திட்டங்கட்கு அடங்கி நடக்கவேண்டும் என்று கூறியதால் தானே -- தி. மு. கழகத்திலிருந்தே வெளியேறிப் புதுக் கட்சி கண்டார் புரட்சித் தலைவர்!

'காசிக்குப் போயும் கருமம் தொலையவில்லை' என்பதுபோல், புதுக் கட்சி அமைத்தும் சட்டக் கட்டுப்பாடு அவரைத் தொடருவதா?

ஒருவேளை -- அவருடைய பார்வையில் படாமலே அங்குள்ளவர்கள் இந்தப் பாரத்தை அச்சிட்டுவிட்டார்கள் போலும்!

இந்தப் பாரத்தில் கையெழுத்துப் போடுபவர்கள்தான் என்ன நினைப்பார்கள்? -- 'கட்சிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்துவிட்டு வந்ததாலேதான் நமது தலைவர் புரட்சித் தலைவர் ஆனார்! நமக்கு மட்டும் ஏன் என்று எண்ணமாட்டார்களா? 'தலைவருக்கு ஒரு நீதி-- தொண்டனுக்கு ஒரு நீதியா' என்று வாய்விட்டு அல்ல -- மனத்திற்குள் கேட்கமாட்டார்களா?

இப்படி உறுப்பினராகச் சேருபவர்கள் -- இல்லை, இல்லை -- சேர்க்கப்படுபவர்கள், சட்ட திட்டங்கட்கு உண்மையாகவே அடங்கி நடப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

அதே பாரத்தில் இன்னொரு வேடிக்கையும் இருக்கிறது; தி. மு. க. உறுப்பினர் சேர்க்கும் பாரத்தின் 8-வது 'கலத்'தில், 'முன்பு உறுப்பினரா?' என்ற ஒரு கேள்வி இருக்கும்; அதே கேள்வி, புதுக் கட்சி உறுப்பினர் சேர்க்கும் பாரத்திலும் இருப்பதுதான் அந்த வேடிக்கை!

தி. மு. கழகம் இருபத்து மூன்று ஆண்டுகளாக இயங்கிவருகிறது; இதில் பழைய உறுப்பினர்களும் இருக்கிறார்கள்--புது உறுப்பினர்களும் சேருகிறார்கள்; சேருவோர் பழைய உறுப்பினரா -- இப்போதுதான் புதிதாகச் சேருகிறாரா என்பதைக் குறிப்பதற்கு அந்தக் 'கலம்' உள்ளது; புதுக் கட்சிக்கு அந்தக் கேள்வி ஏன்?

முன்பு எப்போது அந்தக் கட்சி இயங்கியது? தோன்றிய சில நாட்களுக்குள்ளேயே பழைய உறுப்பினர்கள் எப்படி இருப்பார்கள்?

இந்தக் கேள்விக்கு அந்தக் கட்சியின் அமைப்புச் செயலாளர் பதில் சொல்லக்கூடும்; ஏனென்றால், அவர் பிரபல வழக்கறிஞரும் அல்லவா? இதில் ஏதேனும் சட்டம், நுணுக்கம் இருக்கலாம் -- யார் கண்டார்கள்?

சேங்கதிரவன்,

சென்னை-6.

அரசு டாக்டர்கள் சொந்தத்தில் தொழில் நடத்தத் தடை

உ. பி. அரசு முடிவு

இலட்சுமணபுரி நவ. 13—

அரசாங்க மருத்துவமனை -- அரசாங்க மருத்துவர் கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றும் டாக்டர்கள் சொந்தத்தில் தொழில் நடத்தத் தடை விதிப்பது என்று மத்தியப் பிரதேச அரசு முடிவு செய்திருக்கிறது!

முதலமைச்சர் கமலபதி திரிபாதி தலைமையில் நடந்த உத்தரப் பிரதேச அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

சொந்தத்தில் தொழில் நடத்துவதைக் கைவிட்டுவிடும் அரசு டாக்டர்களுக்கு ஊதிய உயர்வு (... அலவன்சு) கொடுக்கப்படும்; இது, ஊதியத்தில் கால் பங்காக இருக்கும்.

சென்னை-செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கட்கு:

"சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் [illegible]த்துள்ள தொழிலாளர் முன்[illegible] சங்கங்களின் நிர்வாகிகள் கூ[illegible]ம் 14—11—72 மாலை 6 30 மணியளவில், சென்னை — தேனாம்பேட்டை 'அன்பகத்'தில் நடைபெறும்; பொருள்: சங்கங்களின் நிர்வாக நடவடிக்கைகள்; சங்கங்களின் எதிர்கால ஆக்கப் பணிகள்; தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் 'பல்லவ மண்டல மாநாடு'; சங்க நிர்வாகிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச் செயலாளர் காட்டூர் கோபால் அறிவிக்கிறார்.

ஒரிசாவில் நெருக்கடி

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படும்?

புவனேசுவரம், நவ. 12—

இந்திரா காங்கிரசுடன் இணைய வேண்டும் என்று உத்கல் காங்கிரசு நிர்வாகக் குழுவும் -- சட்டமன்றக் கட்சியும் கடந்த ஜூன் திங்களில் நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை உத்கல் காங்கிரசுப் பொதுக்குழு நிராகரித்து விட்டது.

"ஒரிசாவில் நந்தினி சத்பதி தலைமையிலுள்ள அரசைப் பதவியிலிருந்து அகற்றவேண்டும்"

என்று உத்கல் காங்கிரசுத் தலைவர் பிஜூ பட்நாயக், பொதுக்குழுக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒரிசாவில் அரசியல் நெருக்கடி தோன்றும் நிலை உருவாகியிருக்கிறது.

"ஜூன் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையொட்டிப் புது காங்கிரசில் சேர்ந்துள்ள உத்கல் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் புது காங்கிரசிலிருந்து உடனடியாக விலகி உத்கல் காங்கிரசுக்குத் திரும்ப வேண்டும்"

என்று பொதுக்குழு முடிவு செய்தது.

ஜூன் மாதத் தீர்மானத்தையொட்டி 28 உத்கல் காங்கிரசு எம்.எல்.ஏ.-க்கள் புது காங்கிரசில சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; பொதுக்குழுவின் முடிவைத் தொடர்ந்து அவர்கள் புது காங்கிரசிலிருந்து விலகிவிட்டால், நந்தினி சத்பதி தலைமையில் உள்ள புது காங்கிரசு அமைச்சரவை, சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்துவிடும் நிலை ஏற்படும்.

ஒரிசா சட்டமன்றம் மொத்தம் 140 உறுப்பினர்களைக் கொண்டதாகும்; அதில், புதுக் காங்கிரசு சார்பில் தற்போது 94 உறுப்பினர்கள் இருக்கின்றனர்; அவர்களில் 28 பேர் உத்கல் காங்கிரசிலிருந்து புதுக் காங்கிரசில் சேர்ந்திருப்பவர்களாவர்.

குடியரசுத் தலைவர் ஆட்சி?

ஒரிசாவில் உருவாகியுள்ள சூழ்நிலையையொட்டிக் குடியரசுத் தலைவர் ஆட்சி வரக்கூடும் என்ற வதந்தி பரவலாகியிருக்கிறது.

கட்டாக் சட்டமன்ற இடைத் தேர்தலுக்கு முன்பாகவே குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடலாம் என்று கருதப்படுகிறது; இந்த இடைத் தேர்தலில்தான் முதலமைச்சர் நந்தினி சத்பதி போட்டியிடுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] இது வெளியிடப்பெறுகிறது.

அமைச்சர் என். வி. நடராசன் மணிவிழா

தந்தை பெரியார் தலைமையில் பாராட்டு

கழகத் தலைவர் கலைஞர் கேடயம் வழங்கினார்

பொன்னாடை போர்த்தினார் பொதுச்செயலாளர் நாவலர்

வாழ்த்து மடல் அளித்தார் அமைச்சர் சத்தியவாணிமுத்து--விழாமலரை வெளியிட்டார் ம.பொ.சி.--வாழ்த்துக்கள் வழங்கினர் கழக முன்னணியினர் -- கட்சித் தலைவர்கள் -- கலையுலகப்பிரமுகர்கள்

சென்னை, நவ. 13—

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளரும் -- தொழிலாளர் நலத்துறை அமைச்சருமான திரு. என். வி. நடராசன் அவர்களின் மணிவிழா, நேற்று மாலை தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

சென்னை அண்ணா சாலையிலுள்ள தி. மு. க. அறக்கட்டளை 'அண்ணா அறிவாலய'த்தில் நடைபெற்ற இவ்விழாவில் கழகத் தலைவர் கலைஞர் -- பொதுச்செயலாளர் நாவலர் -- அமைச்சர் பெருமக்கள் -- சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் -- பார்வர்டுபிளாக் கட்சித் தலைவர் ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ., முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் வகாப் எம்.எல்.சி. -- மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. -- மாவட்டச் செயலாளர்கள் -- ஏ. எல். சீனிவாசன் -- கவிஞர் கண்ணதாசன் -- டி. வி. நாராயணசாமி -- இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முரசொலி மாறன் எம்.பி.--அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மணி விழா மலரை -- மேலவைத் துணைத் தலைவர் ம.பொ. சிவஞானம் வெளியிட்டு -- முதல் இதழைத் தந்தை பெரியார் அவர்களிடம் அளித்தார்.

விழாக் குழு சார்பிலான வாழ்த்திதழை -- அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வாசித்தளித்தார்.

பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

மணிவிழாக் குழுச் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைச்சர் என்.வி.[illegible]ன். அவர்களுக்குக் கேடயம் வ[illegible]கினார்.

தந்தை பெரியார் அவர்களின் தலைமையுரைக்குப்பின் -- அனைவருடைய வாழ்த்துரைக்குப்பின் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினார்.

தலைமைக் கழகத்தின் சார்பில் அனைவருக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அண்ணா கல்லறையில் மரியாதை செலுத்தினார்

நேற்று காலை என். வி. நடராசன் அவர்கள் தம்முடைய குடும்பத்தினருடன் அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்து வணங்கி வாழ்த்துப் பெற்றார்.

இல்லம் திரும்பியதும் பிறந்த நாள் 'கேக்' வெட்டினார்.

முதலமைச்சர் கலைஞர் என். வி. நடராசன் இல்லத்திற்குச் சென்று அவருக்கு மாலை அணிவித்துப் பிறந்த நாள் வாழ்த்து கூறினார்.

அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் அமைச்சர்களும் மாலை அணிவித்துப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் -- சட்டமன்ற உறுப்பினர்கள் -- தி. மு. கழகப் பிரமுகர்கள் -- அரசு அதிகாரிகள் ஆகியோரும் என். வி. நடராசனுக்கு மாலை அணிவித்து வாழ்த்துக் கூறினர்.

தி. மு. கழகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை

இந்திரா காங்கிரசு நிலைமை என்ன?

தலைமையமைச்சர் நடத்திய ஆலோசனைக் கூட்ட முடிவு

புதுடில்லி நவ. 13—

தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் -- காங்கிரசுக் கட்சித் தலைவர் சங்கர் தயாள் சர்மாவும், தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ள தங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழ்நாட்டு அரசியல் நிலைமை பற்றி விவாதித்தனர்.

மத்திய அமைச்சர்கள் உமாசங்கர் தீட்சித் -- சி. சுப்பிரமணியம் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

"தி. மு. கழகத்தில் ஏற்பட்டுள்ள பிளவு அக்கட்சியின் உள்விவகாரமாகும்; காங்கிரசுக் கட்சி, அதில் எந்தப் பக்கமும் சார்ந்திருக்கக் கூடாது"

என்று மத்தியத் தலைவ[illegible]கள் கருத்து வெளியிட்டனர் எனத் தெரியவருகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

14--11--72

சென்னை 5-வது வட்டம்

தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா -- பொதுக்குழு விளக்கக் கூட்டம்; சோலையப்பன் தெரு மண்டபம் அருகில்; தலைவர்: கே. எம். கண்ணபிரான் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஆற்காடு வீராசாமி எம்.எல்.ஏ., கே. விநாயகம் எம்.எல்.ஏ., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. ஏ. என். இராசரத்தினம், என்.வி.[illegible]. செல்வம், வலம்புரி ஜான், [illegible]. துரைராசு எம்.சி., டி. [illegible] வங்கடேசன் எம்.சி., இரா. [illegible] மனோகரன் எம்.சி., வி. [illegible]. ஆனந்தன் எம்.சி., மு. நட[illegible]சன், மு. சண்முகம், கி. இராமலிங்கம், ஆர். வி. கோதண்டன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் -- மன்றச் செயலாளர்கள்.

தமிழக முதலமைச்சர்--பிரிட்டிஷ் அமைச்சர் பேச்சுவார்த்தை

சென்னை, நவ. 13—

பிரிட்டிஷ் அயல்நாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரிச்சர்ட் வுட் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

இருவரும் 30 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்தனர்; குடிசை மாற்று வாரியம் -- தொழில் வளர்ச்சி -- கல்வி -- உல்லாசப் போக்குவரத்து வளர்ச்சி ஆகிய திட்டங்களில் பிரிட்டிஷ் அமைச்சர் ஆர்வம் காட்டினார்; அவருடன் பிரிட்டிஷ் துணை ஹைகமிஷனரும் வந்திருந்தார்.

அமைச்சர்கள் நாவலர் இரா. நெடுஞ்செழியன், செ. மாதவன், கா. இராசாராம் ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

மத்திய அமைச்சர் பதவி விலகினார்

புதுடில்லி, நவ. 13—

மத்திய அரசின் சமூக நலத் துணையமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி, பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

அவரது பதவி விலகலைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி ஏற்றுக் கொண்டார்.

பதிவேடு

"போதுவாக யார்யார் எவ்வளவு சொத்து தன் பெயரிலோ--உறவினர்கள் பெயரிலோ சேர்த்திருக்கிறார்கள் என்பதை ஒரு நீதிபதியை நியமித்து விசாரிக்க இயலாது; அதற்கு முன்னால் சில குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருக்க வேண்டும்.

குற்றச்சாட்டுக்களை மாநில முதலமைச்சரிடம் அளித்து-- அவற்றை ஒரு நீதிபதியை நியமித்து விசாரணை செய்ய ஏற்பாடு செய்யுமாறு கோருவது தான் சரியாக இருக்கும்.

மத்திய அரசின் தலையீட்டைக் கோருவது சரியாக இருக்காது என்பது எனது கருத்து."

—பி. இராமமூர்த்தி

(புதுக் கட்சித் தலைவருக்கு எழுதிய தாகக் கூறப்படும் கடிதத்திலிருந்து)

வீடுகளை இழந்த குடும்பத்தினருக்கு உதவித் தொகை

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000

சென்னை, நவ. 13—

நெல்லை மாவட்டம் தூத்துக்குடி பகுதியில் அண்மையில் பெய்த பெரு மழையினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக ரூ. 10 000-ஐ, முதலமைச்சர் கலைஞர் அளித்திருக்கிறார்.

'தூய்மைப் பணியல்ல-துரோகம் செய்யவே எம். ஜி. ஆர். துணிந்துள்ளார்'

'கழக ஆட்சியைக் கவிழ்க்க எவராலும் இயலாது'

தந்தை பெரியார் தரும் விளக்கம்

காரமடை நவ. 11—

'தி.மு. கழக ஆட்சி கலைக்கப்படும் என்று சிலர் பேசுவதில் உண்மை ஏதும் இல்லை; அப்படியெல்லாம் கலைத்து விட முடியாது; கலைப்பதற்கு என்ன நடந்துவிட்டது; கலைக்க வேண்டும என்று நினைத்தால் வேறு 8 மாநிலங்களில் தான் முதலில் கலைக்க வேண்டும்; 9-வது மாநிலமாகத்தான் தமிழ்நாட்டுக்கு வர முடியும்; மற்ற மாநிலங்களில் எவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றன--இங்கு அப்படியா நடக்கிறது?

"எதிர்க் கட்சியினர் கூட்டம் போடுவதும்--கலாட்டா செய்வதும்தான் மிச்சமாகும்; வேறு எதுவும் நடக்காது; இந்த ஆட்சியை அசைக்க முடியாது; இதன் திறமையை மக்கள் விரைவில் புரிந்துகொள்வார்கள்"

என்று தந்தை பெரியார் அவர்கள், கோவைக்கு அருகிலுள்ள காரமடையில் செய்தியாளர்களிடம் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்; செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்--பெரியார் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"தி. மு. கழகத்தைத் தூய்மைப்படுத்துவதற்காக ஊழல் குற்றங்களைச் சுமத்துவதாக எம். ஜி. ஆர். கூறுகிறாரே?"

பதில்:—"தி. மு. கழகத்துக்குக் கேடு -- ஊறு உண்டாக்க வேண்டும் -- அதை அழிக்க வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம்; தூய்மைப்படுத்த வேண்டும் என்பது இல்லை."

கேள்வி:—"எம்.ஜி.ஆரை விலக்கியதால் கழகம் பாதிக்கப்படுமா?"

பெரியார்:—"அப்படி ஒன்றும் இல்லை; பாதிப்பு எதுவும ஏற்படாது; தி. மு. க.-வில் 184 எம். எல். ஏ.-க்கள் உள்ளனர்; இதில் ஒரு சிலர் கட்சி மாறுவதால் பெரிய பாதகம் ஏற்பட்டு விடாது; 50 பேர் போனாலும் ஒன்றும் ஆகிவிடாது."

கேள்வி:—"தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வருமா?"

பதில்:—"தி. மு. கழக ஆட்சி தான் நீடித்து இருக்கும்; 3 ஆண்டுகளும் தொடர்ந்து அவர்கள் ஆட்சி செய்வார்கள்; யாராலும் ஒன்றும் செய்துவிட முடியாது; இவர்கள் திறமை மக்களுக்கு தெரியத்தான் போகிறது."